**தலைப்பு 255 – கொழும்பு மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு – 255 கொழும்பு மாவட்டச் செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றுக்களும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஜுலை 11 ஆந் திகதியன்று மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களது செவ்வை பார்த்தல்களின் அடிப்படையில் எழுந்தனவே ஆகும். அம் மீளாய்வினதும் பரிசீலனைகளினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணி, ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 148,149,150, 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச் சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள் ஆகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்து, நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டுக்களைத் திட்டமிடல், அமுலாக்குதல், பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

மாவட்டச் செயலகத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த நிகர நிதி ரூபா 1,513.50 மில்லியன் ஆகும். மீளாய்வாண்டின் இறுதியில் அதில் ரூபா 1,281.26 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, மாவட்டச் செயலகத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த நிகர நிதிஏற்பாட்டின் ரூபா 232.24 மில்லியன் அல்லது 15.34 சதவீதம் சேமிப்புக்குள்ளாகியது. விபரம் வருமாறு

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | நிகர நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | நிகர நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | |
| மீண்டுவருவன | 688.70 | 678.72 | 9.98 | 1.45 |
| மூலதனம் | 824.80 | 602.54 | 222.26 | 26.95 |
| மொத்தம் | **1513.50** | **1281.26** | **232.24** | 15.34 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்களாலும் மற்றும் திணைக்களங்களாலும் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு பணிகளுக்காக மாவட்டச் செயலகத்திற்கு ஏனைய 20 அமைச்சுக்களாலும் 12 திணைக்களங்களாலும் ரூபா 4.165.3 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் அதில் ரூபா 4.008.5 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் ரூபா 156.8 மில்லியன் அல்லது 3.76 சதவீதம் சேமிப்புக்குள்ளாகியது. விபரம் வருமாறு.

**2.2 முற்பணக் கணக்கு**

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்திற்குரிய 25501 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளவாறான பெறுமதி என்பன பின்வருமாறு.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | அதிகூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 47.39 | 39.29 | 34.00 | 38.50 | 200.00 | 155.53 |

**2.3 கட்டுநிதிக் கணக்கு**

மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள 70002/0000/00/0302/0015/000 இலக்க கட்டுநிதிக் கணக்கின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 574.3 மில்லியன் ஆகும்.

**2.4 பொது வைப்புக் கணக்கு**

மாவட்டச் செயலகத்தின் கீழ் 6003/000/00/0001/000 இலக்கப் பொது வைப்புக் கணக்கில் ரூபா 10.00 மில்லியன் வரவு மீதி நிலவியது. மேலும், 08 கணக்குகளில் அத் தினத்தில் உள்ளவாறு ரூபா 543.48 மில்லியன் கூட்டுத்தொகையுடைய செலவு மீதி நிலவியது. விபரம் வருமாறு.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/000/0001/0057/000 | 32.07 |
| 6000/0000/000/0017/0006/000 | 221.47 |
| 6000/0000/000/0013/0046/000 | 82.24 |
| 6000/0000/000/0016/0026/000 | 196.69 |
| 6000/0000/000/0018/0006/000 | 3.59 |
| 6000/0000/000/0019/0001/000 | 3.32 |
| 6000/0000/000/0020/0006/000 | 4.06 |
| 6000/0000/000/0002/0075/000 | 0.04 |
| மொத்தம் | 543.48 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

கொழும்பு மாவட்டச் செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கும் இணைக்கக் கூற்றுக்களும் மேற்படி 1.1 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்படும் கணக்காய்வு அவதானிப்புகளுக்குட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கிய அவதானிப்புகளில் பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகளும் ஏடுகளும் பேணப்படாமை

மாவட்டச் செயலகம் கீழே குறிப்பிடப்பட்ட பதிவேடுகளை முறையாகவும் நாளது வரையாகவும் பேணாதிருந்தமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேட்டு வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றிக்கை |
| (ஆ) | கணனிகள், துணைப் பாகங்கள், மென் பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை. |
| (இ) | மின்சார உபகரணங்களுக்கான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| (ஈ) | கடன் மற்றும் முற்பணப் பதிவேடு | 1994 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 09(1) அம் பந்தி |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.2.1 பாதீட்டு முரண்கள்

03 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு செய்யப்பட்டமையால் நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அச் செலவின விடயத்திற்குரிய நிகர நிதியேற்பாட்டில் 12 சதவீதம் முதல் 28 சதவீதம் வரையிலான வீச்சில் அமைந்திருந்தது.

### 3.2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் வழங்கிய நிதியேற்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்வேறு பணிகளுக்கென 04 அமைச்சுக்களால் மாவட்டச் செயலகத்திற்கு வழங்கிய நிதியேற்பாட்டில் குறித்த பணிகளுக்கு அவற்றைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு 33 சதவீதம் முதல் 44 சதவீதம் வரையிலான வீச்சில் அமைந்திருந்தது.

(ஆ) உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சு 2015 ஏப்ரல் 28 ஆந் திகதியன்று விதாதா நிலையக் கட்டிட நிர்மாண வேலைக்கு பாதுக்கை பிரதேச செயலகத்திற்கு 3,000,000 நிதியேற்பாடு செய்திருந்தது. குறித்த நிலையக் கட்டிட நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாததால் ரூபா 1,588,938 நிதியேற்பாடு பயன்படுத்தப்படாது சேமிப்புக்குள்ளாகியது.

(இ) சமூக சேவைகள் திணைக்களத்தால் புவக்பிட்டிய ஜயவிறு சமாதி நிறுவகத்தின் சமையலறையை நிர்மாணிக்கும் வேலைக்கு ரூபா 12,000,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதும், அந் நிதியேற்பாட்டின் மூலம் குறித்த பணியை நிறைவேற்றாது மொத்த நிதியேற்பாடும் சேமிப்புக்குள்ளாகியது.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 3,490,894 வைப்புகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) செலவினத்தை மீள நிரப்புவதற்கு ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றிலிருந்து 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட ரூபா 705,227 குறித்த பணியை நிறைவேற்றி செலவினத்தைத் தீர்த்து வைக்கவோ அல்லது சேமிப்பைக் குறித்த நிறுவனத்துக்கு வழங்கவோ நடவடிக்கை எடுக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

விடய இலக்கம் 25501 - அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 5,012,312 ஆகவிருந்த கடன் நிலுவை மீதிகளில் ரூபா 3,793,447 கடன் மீதியானது 1 முதல் 21 ஆண்டுகளாக நிலவிய போதும், அம் மீதிகளை அறவிடுவதற்கு அலுவலகம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தவறியிருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரிக் கணனி அச்சீட்டுக் குறிப்பின் பிரகாரம் மீதி ரூபா 155,530,951 ஆகும். மாவட்டச் செயலக ஏடுகளின் பிரகாரம் கடன் மீதி ரூபா 154,350,069 ஆகும். அதற்கமைய, ரூபா 1,180,882 வித்தியாசம் வெளியாகிய போதும், அதில் ரூபா 1,197,132 சம்பந்தமாக இணக்கத்தைச் செய்து அதனைத் திருத்துவதற்கு அலுவலகம் தவறியிருந்தது.

**3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

---

**3.5.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

---

2002 செப்டெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றிக்கையின் பிரகாரம் மாவட்டச் செயலகமானது நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிகையைப் பாராளுமன்றத்தில் முன் வைக்க வேண்டுமாயினும், அவ்வறிக்கையானது 2016 ஜுன் 14 ஆந் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5.2 உள்ளகக் கணக்காய்வு**

---

மாவட்டச் செயலகத்தில் உள்ளகக் கணக்காய்வுக் கூறு ஒன்று செயற்பட்டபோதும், போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.6 தீர்த்து வைக்கப்படாத பொறுப்புகள்**

---

மாவட்டச் செயலகம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைக்காத 01 ஆண்டுகளுக்கும் குறைவான பொறுப்புகளது கூட்டுத்தொகை ரூபா 4,517,262 ஆகும். 09 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் பயன்படுத்தியதன் பின்னர் எஞ்சியவை ரூபா 325,052 ஆகும். அச் சேமிப்பு ரூபா 2,020,029 அதிகரிப்புக்குள்ளாகி ரூபா 2,345,081 பொறுப்பை ஏற்படுத்தியிருந்தது.

**3.7 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுலாக்குதல்**

---

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல், செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்யாது கைவிடல் மற்றும் செயற்திட்டத் தாமதம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது பின்வரும் குறைபாடுகள் புலனாகின.

(அ) செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடுதல்

---

100 நாள் விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்தவாறு 1500 கிராமங்கள் வீட்டுக்கு வீடு, கிராமத்துக்கு கிராமத்தைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கெஸ்பாவ பிரதேச செயலகத்தால் அமுலாக்கப்பட வேண்டிய 03 செயற்திட்டங்கள் காணி தொடர்பாகச் சிக்கல்கள் உருவாகியதால் அச் செயற்திட்டம் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, ரூபா 2,035,394 கூட்டுத்தொகையுடைய 2 செயற்திட்டங்கள் போதிய கால அவகாசமின்மை காரணமக ஒப்பந்தகாரரால் உடன்படிக்கையின் கைச்சாத்திடமறுத்ததன் காரணமாக அவ்விரு செயற்திட்டங்களும் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தும் வேலையை ஆரம்பிக்காத செயற்திட்டங்கள்

---

மாவட்டச் செயலகம் மீளாய்வாண்டில் அமுலாக்குவதற்கு உத்தேசித்த ரூபா 5,099,321 கூட்டுமொத்த மதிப்பீட்டுக் கிரயத்தினையுடைய 05 செயற்திட்டங்களுக்கு ரூபா 4,410,775 நிதியேற்பாடு பெறப்பட்டிருந்தது. காலம் போதாமை, ஒப்பந்தகாரர் வேலையை

ஆரம்பிக்காமை, இடம் தொடர்பாக எதிர்ப்புகள் உருவாகியமை போன்ற காரணங்களால் 05 செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்யாது கைவிடுதல்

கெஸ்பேவ பிரதேச செயலகம் பின்வரும் செயற்திட்டங்களை ஆரம்பித்திருந்த போதும், உடன்படிக்கைப் பிரகாரம் ஒப்பந்தகாரர்கள் வேலையைப் பூர்த்தி செய்யாமையால் அந்த ஒப்பந்தக்காரர்கள் கறுப்பு பட்டியலிடப்பட்ட ஒப்பந்தகாரர்களாக நிரல்படுத்தப்பட்டமையினால், அதன் காரணமாக செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தது.

| **செயற்திட்ட இலக்கம்** | **செயற்திட்டம்** | **மதிப்பீட்டுப் பெறுமதி** |
|---|---|---|
| | | **ரூபா** |
| HDP/KES/01 | புபுது மாவத்தைக் கழிவு நீர் வடிந்து செல்லும் ஓடையில் ஏறக்குறைய 300 மீட்டர் தூரத்துக்கு மதகு அமைத்து அதனை அபிவிருத்தி செய்தல் | 1,051,640 |
| HDP/KES/90 | மடபாத்த ஶ்ரீ சைலதலாராம புராண விகாரையில் ஶ்ரீ லீலானந்த அறநெறிப் பாடசாலையின் கட்டிடத்தினது முதலாம் மாடியைப் புனரமைத்தல் | 1,648,662 |

## 3.8 இழப்புகளும் நட்டங்களும்

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது வெளியாகிய இழப்புகளும் நட்டங்களும் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு

(அ) மாவட்டச் செயலகத்தின் கெப் வண்டி ஒன்று 10 ஆண்டுகளுக்கு மேலாக விபத்து காரணமாக இழப்பிற்குள்ளாகியிருந்தது. அந்த இழப்பை நிதிப் பிரமாணத்தின்படி செயற்பட்டு அறவிடுவதற்கோ அல்லது இழப்பைப் பதிவழிப்பதற்கோ மீளாய்வாண்டு முடிவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 05 ஆண்டுகளுக்குக் குறைவாக நிலவிவரும் ரூபா 92,641,003 மற்றும் 5 முதல் 10 ஆண்டுகளாக நிலவிவரும் ரூபா 10,680 இழப்பு என்பன 05 சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட இழப்புகளாகும். குறித்த இழப்புகளும் நட்டங்களும் மீளாய்வாண்டினது ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டிருந்தன. இழப்புகள் சம்பந்தமாக 2016 ஆகஸ்ட் 30 ஆந் திகதியளவிலும் நிதிப் பிரமாணத்தின் படி செயற்பட்டு அறவீடுகளை மேற்கொள்வதற்கோ அல்லது அதனைப் பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.9 முகாமைத்துவ நலிவுகள்

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கெஸ்பேவ பிரதேச செயலகம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கொடுப்பனவு செய்யாதிருந்த வயது முதிர்ந்தோருக்கான ஜீவனோயப்படி ரூபா 64,000 தொகையும் கொடுப்பனவு செய்யாத உதவு தொகையாகிய ரூபா 37,000 தொகையும், கொடுப்பனவு செய்யாத சமூர்த்தி அதிகார சபைப் படியாகிய ரூபா 32,300 தொகையும், கொடுப்பனவு செய்யாத ஓய்வூதியமாகிய ரூபா 329,175 மற்றும் மஹிந்த சிந்தனை நிகழ்ச்சித்திட்டத்தின் கொடுப்பனவு செய்யாத வைப்பாகிய ரூபா 48,000 தொகையும் என ரூபா 510,479 கூட்டுத்தொகையைக் குறித்த நிறுவனங்களுக்குத் திருப்பிச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காது அவற்றைப் பொது வைப்பில் இட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கெஸ்பேவ பிரதேச செயலகத்தில் 2011 ஆம் ஆண்டில் வைப்பிலிடப்பட்ட மூன்றாம் நபர் வைப்பாகிய ரூபா 214,000 மற்றும் 2012 ஆம் ஆண்டின் நிறுத்தி வைத்த வைப்பாகிய ரூபா 10,000 தொகை 2013 ஆம் ஆண்டின் நிறுத்தி வைத்த வைப்பாகிய ரூபா 104,774 என மொத்தமாக ரூபா 328,774 நிதிப்பிரமாணத்திற்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அரசாங்க வருமானத்தில் வருவாயில் செலவு வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.10 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 50 | 46 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 27 | 19 | 08 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,603 | 1,347 | 256 |
| (iv) | ஆரம்ப நிலை | 133 | 123 | 10 |
| | மொத்தம் | 1,813 | 1,535 | 278 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் முடிவளவில் 278 வெற்றிடங்கள் நிலவிய போதும், 2015 ஆம் ஆண்டிற்கெனத் தயாரிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியைப் பயன்படுத்தாது சேமிப்பு ஏற்பட்டிருந்த போதும், அச் சேமிப்புத் தொடர்பில் பதவியணி வெற்றிடம் பாதித்திருக்கவில்லை. அதற்கமைய, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியானது அதிகளவு மதிப்பிடப்பட்டதொன்றாகக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.